**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| 2024-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2-ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு 1-ம் சாட்சியின் வாக்கு மூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
|---|---|---|---|
| பெயர்: | அழகச்சி | தொழில் : | |
| த.பெ: | | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**2.4.2024 OS No.103/2019 வா.சா.1 அழகச்சி ஆஜர்**

**முதல் விசாரணை :**

1. நான் இந்த வழக்கின் வாதியின் அதிகார முகவர் ஆவேன். வாதி தரப்பு 1-ஆம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து காண்பித்து பின்பு நான் அதில் கையெழுத்து செய்துள்ளேன். பிராமண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

2. தாவா சொத்து சம்பந்தமான A ரிஜிஸ்டரின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன்.**( A ரிஜிஸ்டர் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 26.7.1968-ம் தேதியிட்டு ரா.கருப்பணன் அம்பலம் மகன் ராமன் அம்பலத்திற்கு உ.க.கருப்பன் அம்பலம் மகள் அய்யம்மாள் எழுதிக் கொடுத்த பதிவு செய்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன்.**( தானசெட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** எனது தகப்பனார் 3.3.1999-ம் தேதியிட்டு மானாமதுரை வட்டாட்சியரிடம் கொடுத்த மனு கை நகல் மற்றும் மானாமதுரை வட்டாட்சியரின் திருப்புதல் குறிப்பு தாக்கல் செய்கிறேன்.**( மனு கை நகல் மற்றும் வட்டாட்சியரின் குறிப்பு வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**3.** தாவாச் சொத்திற்குரிய பட்டா எண். 2214-ன் கூட்டுப் பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன்.**(பட்டா வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** தாவா சொத்தின் மதிப்பை காட்டக் கூடிய பதிவுத்துறை சான்று இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன்.**(பதிவுதுறை சான்று வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** தாவாச் சொத்தின் இயற்கை அமைப்பை காட்டக் கூடிய புகைப்படங்கள் 4 எண்ணம், குறுந்தகடு மற்றும் ரசீது அடங்கிய கோப்பு தாக்கல் செய்கிறேன். **( சாட்சிய சட்டம் பிரிவு 65பி-ன் கீழான சான்று இல்லாததால் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணை செய்தார். புகைப்படங்கள், குறுந்தகடுற்றும் ரசீது வா.சா.ஆ.6 வரிசை 4 எண்ணம் ஆக ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)**

**4.** தாவாச் சொத்தின் இயற்கை அமைப்பை காட்டக் கூடிய புகைப்படங்கள் 4 எண்ணம், குறுந்தகடு மற்றும் ரசீது அடங்கிய கோப்பு தாக்கல் செய்கிறேன். **( சாட்சிய**

**சட்டம் பிரிவு 65பி-ன் கீழான சான்று இல்லாததால் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணை செய்தார். புகைப்படங்கள், குறுந்தகடுற்றும் ரசீது வா.சா.ஆ.7 வரிசை 4 எண்ணம் ஆக ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)** தாவாச் சொத்தை காட்டக் கூடிய மாதிரி வரைபடம் தாக்கல் செய்கிறேன்.**(மேற்படி வரைபடத்தில் வாதியின் கையெழுத்தோ, வழக்கறிஞரின் கையெழுத்தோ, சர்வேயரின் கையெழுத்தோ இல்லாததால் பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டது. பிரதிவாதி தரப்பு ஆட்சேபணைக்கு உட்பட்டு மாதிரி வரைபடம் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

**(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct

District Munsif Cum Judicial Magistrate, Thiruppuvanam.